People's Watch
No.32, Besant Road, Chokkikulam, Madurai - 625 002
Phone: +91-452-2531874 & 2539520 Fax: +91-452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.peopleswatch.org

A Network Towards Human Rights Monitoring, Intervention, Campaign, Research and Documentation
(A Programme Unit of the Centre for Promotion of Social Concerns)

மதிப்புமிகு முனைவர் திரு. சைலேந்திர பாபு, IPS அவர்களுக்கு,

**பொருள்: குற்றம் சாட்டப்பட்டவர்களை அல்லது சந்தேகத்திற்குரியவர்களைக் காவல்நிலையங்களில் எவ்வாறு நடத்த வேண்டும் என்று "41 வழிகாட்டல் நெறிமுறை நடவடிக்கைகளை" அண்மையில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து காவல் நிலையங்களுக்கும் ஜூன் 14, 2022 தேதியிட்ட சுற்றறிக்கையில் வெளியிட்ட தங்களுக்கான பாராட்டுக் கடிதம்.**

மரணத்தை விளைவிக்கும் காவல் சித்திரவதை, காவல் வன்முறை போன்ற சம்பவங்கள் தமிழகத்தில் நிகழும் போதெல்லாம் மக்கள் கண்காணிப்பகம் பெரிதும் கவலை கொண்டது. இந்நிகழ்வுகள் மனிதநேயம் மிக்க காவல்துறை அதிகாரிகள் உள்ளிட்ட குடிமக்களின் மனசாட்சியை வெகுவாக உலுக்கியது.

இத்தகைய இடர்மிகு நேரத்தில் தாங்கள் சரியான முடிவெடுத்து "41 வழிகாட்டல் நெறிமுறை நடவடிக்கைகளை" சுற்றறிக்கை மூலம் வெளிப்படையாக அறிவித்தது போற்றுதலுக்குரிய செயலாகும். இந்த சுற்றறிக்கையை மிகவும் உன்னிப்பாகப் படித்த போது தமிழ்நாட்டில் அண்மையில் நடந்த காவல் மரணங்களே இதற்கு அடித்தளமாக அமைந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

இத்தகைய சிறப்புமிகு நடவடிக்கை மேற்கொண்ட காவல்துறை தலைமை இயக்குநர்அவர்களுக்கு மனமார்ந்த நன்றி தெரிவிப்பது மட்டற்ற மகிழ்ச்சி மட்டுமல்ல, எங்களது சமூகக் கடமையுமாகும். தாங்கள் வெளியிட்டுள்ள "41 வழிகாட்டல் நெறிமுறை நடவடிக்கை" சுற்றறிக்கையை எங்களோடு பணியாற்றும் அமைப்புகள், இயக்கங்கள் போன்றோரோடு இணைந்து தமிழ்நாடு முழுவதும் பரப்புரை செய்து குடிமைச்சமூகத்தின் பல்வேறு பிரிவினரிடையே இது பற்றிய விழிபுணர்வை ஏற்படுத்த உள்ளோம். காவல்துறையின் அடிமட்ட நிலையில் திறம்பட பணியாற்றும் மண்டல காவல்துறை தலைவர்கள், மாநகர காவல்துறை ஆணையர்கள், மாநகர காவல்துறை

கூடுதல் ஆணையர்கள் மூலம் தரமான, நம்பகத்தன்மையுடைய கண்காணிப்பை அங்கீகரிப்பதன் மூலம் மேலே குறிப்பிட்ட "41 வழிகாட்டல் நெறிமுறை நடவடிக்கையை" அர்த்தமுள்ளதாக செயற்படுத்த முடியும். பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு 2006 இல் பிரகாஷ் சிங் எதிர் யூனியன் ஆஃப் இந்தியா வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் கூறப்பட்டுள்ள மாநில மற்றும் மாவட்ட காவல் புகார் ஆணையத்தின் உறுப்பினர்களாக நியாயமான, கட்சி சார்பற்ற, பொது வாழ்வில் நேர்மையாக செயல்படும் நல்ல உறுப்பினர்களை நியமிப்பதன் மூலம் இதுபோன்ற முன்னுதாரண நடைமுறைகளை தங்களால் உருவாக்க முடியும். மாநில காவல் புகார் ஆணையத்திற்கு ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் மாவட்ட அளவில் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதிகள் உள்ளிட்ட 120 பேரைக் கொண்ட அமைப்பு உருவாக்கப்பட்டால் 41 வழிகாட்டல் நெறிமுறை நடவடிக்கை அடிமட்ட நிலையில் எவ்வாறு செயலாக்கம் பெறுகிறது என்பது பற்றிய கருத்துகளைக் கண்டறிய ஏதுவாக இருக்கும்.

தமிழகத்தில் தங்களைப் போன்ற காவல்துறை தலைமை இயக்குநர்கள் நியமனத்திற்கு 2007-ஆம் ஆண்டிலிருந்து அடிப்படையாக இருந்த பிரகாஷ் சிங் வழக்கின் தீர்ப்பில், கள நிலை அதிகாரிகளான காவல் நிலைய பொறுப்பு அதிகாரிகள், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர்கள், மாநகர காவல்துறை ஆணையர்கள், மண்டல காவல்துறை தலைவர்கள், துணை தலைவர்கள் போன்றோரை ஒரு இடத்தில் குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் சுதந்திரமாக பணியாற்றக் கூடிய நிலை உருவாக வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளது. காவல் நிலையங்களில் சட்டம் ஒழுங்கை நிர்வகித்தல், குற்ற விசாரணைகளை மேற்கொள்ளுதல், மண்டல அளவில் இவற்றைக் கண்காணித்தல் போன்றவை உயர் அதிகாரிகளின் செயல் திறனை மேம்படுத்துவதாக இருக்க வேண்டும். இதே பதவிகளில் ஓராண்டுக்கு முன் நியமிக்கப்பட்ட அதிகாரிகள், பெரும்பாலான நேரங்களில் ஓராண்டு கூட நிறைவடையாமல் அண்மையில் இடமாற்றம் செய்யப்பட்டதையும், சில நேரங்களில் சில மாதங்களுக்கும் குறைவாக இருப்பதையும் பார்க்க முடிந்தது. காவல்துறை இடமாற்றங்கள், குறிப்பாக இத்தகைய அதிகாரிகளின் இடமாற்றத்திற்கு எக்காரணம் கொண்டும், அரசியல் தலையீடோ அல்லது அரசியல் காரணமோ இருக்கக் கூடாது. பொறுப்பான காவல்துறை அதிகாரிகளின் பணித்திறன்

செழுமைபெற அவர்களின் செயற்பாடு சட்டத்தின் எல்லைக்குள் கொண்டு வரப்பட வேண்டும்.

உச்சநீதிமன்ற நீதியரசர் நாரிமன் அவர்களால் பரம்வீர்சிங் வழக்கில் அனைத்து காவல் நிலையங்களிலும் 24 மணி நேரமும் ஆடியோ, வீடியோ வசதியுடன் 18 மாதங்கள் சேமிப்புத் திறன் கொண்ட சி.சி.டி.வி கேமராக்களை உடனடியாக பொருத்த வேண்டும் என்று 02.12.2020 அன்று கட்டளையிட்டுள்ளார். இதில் மக்கள் கண்காணிப்பகம் தலையீடு செய்து இந்த தீர்ப்பை பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. இதே தீர்ப்பில் ஒவ்வொரு காவல் நிலைய நுழைவாயிலில் இக்காவல் நிலையம் சி.சி.டி.வி கேமரா கண்காணிப்பில் உள்ளது என்ற வாசகம் அடங்கிய சுவரொட்டி இருக்க வேண்டும். மனித உரிமை மீறலால் பாதிப்புற்றவர்கள், பொதுமக்கள் அதன் பதிவுகளை முறையாக எழுதி பெற்றுக் கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். மக்கள் கண்காணிப்பகம் மற்றும் அதனுடன் இணைந்து செயல்படும் அமைப்புகள், காவல் நிலையங்களில் சி.சி.டி.வி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளதா? என்பதைக் கண்காணித்து, அதன் அறிக்கையை, தாங்கள் விரும்பினால் தங்களுக்கு ரகசியமாக சமர்ப்பிக்க தயார் நிலையில் உள்ளது. பல நேரங்களில் காவல் நிலைய வன்முறை சம்பவத்திற்கு காரணமாக இருக்கக்கூடிய காவல் அதிகாரிகள் / காவலர்கள் ஏற்கெனவே மாநில மனித உரிமை ஆணையம் அல்லது குற்றவியல் நீதிமன்றம் ஆகிறவற்றால் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுள்ளனர். அல்லது வழக்குகள் நிலுவையில் உள்ளவர்களாக உள்ளனர். எனவே மேற்படி அதிகாரிகள் / காவலர்கள் குற்றப் பின்னணி (Police History Sheeters) உள்ளவர்கள் என்று அழைக்கப்படுபவர்களாக உள்ளனர். பொதுவாக இவர்கள் மீதான வழக்கில் குற்றம் நிரூபிக்கப்பட்டாலும் சில நேரங்களில் ஒரு நாள் கூட பணியிடை நீக்கம் இல்லாமல் தொடர் பணியில் இருக்கிறார்கள் என்பது வியப்பாக உள்ளது. உயர் அதிகாரிகளின் ஆதரவு இல்லாமல் இவ்வாறு நடக்க வாய்ப்பில்லை. தங்களுக்கு கீழ் பணி புரியும் காவல்துறை தலைவர்கள், ஆணையர்கள் இது போன்று மாநில மனித உரிமை ஆணையம், குற்றவியல் நீதிமன்றம் ஆகியவற்றால் தீர்ப்பு பரிந்துரை செய்யப்பட்டும் இதுவரை ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இவ்வாறு குற்றமிழைத்தவர்களின் பட்டியலை தயார் செய்து, இப்பட்டியலில் இடம் பெறுபவர்கள் பொதுமக்களுடன் தொடர்பில்லாத பணி (ஆயுதப்படை பிரிவு, சிறப்பு படைப் பிரிவு)

செய்பவர்களாக நியமிக்கப்படலாம். இது போன்று தாங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் ஒரு சரியான செய்தியை வெளிப்படையாகவும் பலமாகவும் கொண்டு செல்லும். தமிழ்நாடு காவல்துறையை விமர்சனத்திற்கு உள்ளாக்கும் சில காவலர்களின் செயல்பாடுகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டால், ஒட்டுமொத்த தமிழ்நாடு காவல்துறையின் பெயர் காப்பாற்றப்படும்.

சென்னை விக்னேஷ் வழக்கில், எம்மால் கண்டுபிடிக்கப்பட்டது யாதெனில், இரவு நேர ரோந்துப் பணியில் ஊர்க்காவல் படையினரும் ஈடுபடுத்தப்படுகிறார்கள் என்பதாகும். ஊர்க்காவல் படையினர் காவல்துறையினராக மாற முடியாது. காவல்துறையினர் முறையான பயிற்சி பெற்றவர்களாவர். எனவே பயிற்சி இல்லாத ஊர்க்காவல் படையினரை இதுபோன்ற பணியில் ஈடுபடுத்துவதன் மூலமாக தவறாக செயல்பட வழிவகுக்கிறது. பல மனித உரிமை மீறல்கள் இரவு நேரத்தில் நடைபெறுகிறது. நகர்ப்புறங்களில் மட்டுமல்லாது ஊரகப் பகுதிகளிலும் ரோந்துப் பணியை கண்காணிக்க உயர் அதிகாரிகள் உள்ளனர். மனித உரிமை மீறல்கள் ஏற்படும்போது, பொறுப்பான உயர் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. சர்வதேசிய குற்றவியல் சட்டப்படி கட்டளையிடக்கூடிய நிலையில் (Command & Responsibility) இருக்கும் **உயர் அதிகாரிகள் மீறல்களுக்கு பொறுப்பேற்க வேண்டும்.** உதாரணமாக சென்னையில் ரோந்துப் பணியில் இருந்த காவலர்கள், இரவு 11.00 மணி முதல் 2.00 மணி வரை விக்னேஷை சித்திரவதை செய்துள்ளனர். இதில் ஈடுபட்ட காவலர்கள் மற்றும் ரோந்துப் பணியில் இருந்து காவல் துணை ஆணையர், காவல் இணை ஆணையர் ஆகியோர் இதற்கு பதில் சொல்ல கடமைப்பட்டவர்களாவர். எனவே இவர்களும் சர்வதேச கோட்டுபாடுகளின்படி உரிய நடவடிக்கைகளுக்கு உட்படுத்தபட்டிருக்க வேண்டும். அத்தகைய நடவடிக்கைகள் தங்களைப் போன்ற உயர் அதிகாரிகளின் கரங்களை வலுப்படுத்தும். தங்களுடைய 41 வழிகாட்டு நெறிமுறைகளை மக்கள் கண்காணிப்பகம் பாராட்டும் அதே நேரத்தில், மேற்படி வழிகாட்டுதலை மாநில, மாவட்ட, தாலுகா ரீதியில் செயல்படும் இலவச சட்ட உதவி ஆணைக்குழு/கமிட்டி தலைவர்களுக்கும், செயலர்களுக்கும், மாநில மனித உரிமை ஆணையம், மாநில குழந்தைகள் உரிமைகள் ஆணையம், மாநில பெண்கள் ஆணையம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாநில ஆணையம், மாநில

மாற்றுத்திறனாளர்கள் ஆணையம், மாநில சிறுபான்மையினர் ஆணையம் ஆகியோருக்கு இதைப் பகிர்ந்து அவர்களின் முழு ஒத்துழைப்பை வேண்டுமாறு கோருகிறோம். இறுதியாக தங்கள் நடவடிக்கையை மக்கள் கண்காணிப்பகம் முழு மனதுடன் வாழ்த்தும் போது, தங்கள் பணியை ஒரு ஆழமான ஆக்கப்பூர்வ விமர்சனக் கண்ணோட்டத்துடன் எப்போதும் கண்காணிப்போம் என்றும் உறுதியளிக்கிறோம். மேலும் அதை தனி நபர் சார்ந்ததாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்றும் வேண்டுகிறோம். அது தமிழ்நாடு காவல்துறையின் பணியை மேம்படுத்த பயனளிக்கும் என்று நம்புகிறோம். சட்டம் ஒழுங்கை பராமரிப்பது என்பது ஒரு கடினமான பணி என்பதில் மாற்றுக் கருத்தில்லை ஆனால் இப்பணியை தமிழ்நாட்டில் பொது மக்கள் ஆதரவுடன், **ஆளுங்கட்சி அரசியல்வாதிகளின் தலையீடு இல்லாமல்** செயல்பட்டால் இக்கடினமான பணியை வெற்றிகரமாக கொண்டு செல்ல முடியும் என்று உறுதி கூறுகிறோம்.

நன்றி,
இப்படிக்கு,



**(ஹென்றி திபேன்)**
மக்கள் கண்காணிப்பகம்